**<u>Sub Court, Eraniel</u>**

O.S. No. 137/2023
Date: 09.02.2026.
பி.வா.சா.1 - திரு.ரெஜிஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணைத் தொடர்ச்சி</u>

எனக்கு 03.02.2016 ல் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன்பு எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால், சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததால் பெண் தர யாரும் முன் வரவில்லை என்றால், சரியல்ல. எனவே எனது தகப்பனாரை நான் மிரட்டி தாவா சொத்தினை என் பெயருக்கு எழுதி வைத்தால் தான் திருமணம் நடக்கும் என்று கூறி வந்தேன் என்றால், சரியல்ல. என் திருமணத்திற்கு முன்பாகவே வழக்கு பட்டிகை சொத்தை எனது தகப்பனாரிடம் இருந்து செட்டில்மென்ட் எழுதி வாங்கி கொண்டேன் என்றால், சரிதான். எனது தகப்பனார் 2017 ல் இறந்தார். எனது தகப்பனார் 2015 ல் உடல் நிலை சரியில்லாமல் இருந்த போது அவரை நான் மிரட்டி செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வாங்கி கொண்டேன் என்றால், சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.1 செட்டில்மென்ட் ஆவணம் செல்லுபடியாகாது என்றால், சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எனது மனைவிக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர் அவருடைய தாயார் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால், சரியல்ல. நான் வெளிநாட்டில் வேலை பார்த்ததால் அவர் தாயார் வீட்டில் தங்கியிருந்தார். திருமணத்திற்கு பிறகு நான் 4 ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்தேன். அவ்வாறு 4 வருடங்கள் நான் வெளிநாட்டில் வேலை பார்த்ததற்கு ஆதரவாக எனது பாஸ்போட் முதலான ஆவணங்களை தாக்கல் செய்யலாம். நான் எனது மனைவியை துன்புறுத்தியதால் தான் அவர் தாயார் வீட்டிற்கு சென்றார், என்றாலும், நான் குறிப்பிடுவது போல நான் வெளிநாட்டில் வேலை பார்க்கவில்லை என்றாலும், சரியல்ல. எனது மனைவி எனக்கு எதிராக இரணியல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், என் மனைவி கொடுக்கவில்லை அவருடைய சகோதரர் தான் கொடுத்தார். எனக்கும் அந்த சகோதரருக்கும் கைகலப்பு ஏற்பட்டதால், அவர் புகார் கொடுத்தார். நான் எனது மனைவியை அடித்ததால், அவருடைய சகோதரர் என்னை ஏன் என்று கேட்டபோது கைகலப்பு ஏற்பட்டு அந்த புகார் கொடுத்தார் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் எனது அம்மாவும் ஒரு

சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்த விபரம் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் ஆன எனது சகோதரிகளுக்கு தெரியாது என்றால், சரியல்ல. 3 பேருக்கும் தெரியும். அந்த சமயத்தில் லொரேட்டா மற்றும் புனிதா ஆகியோர் எங்கள் வீட்டில் தான் இருந்தார்கள். செட்டில்மென்ட் ஆவணம் எழுதிய விபரம் எனது அக்கா லொரேட்டாவிற்கு 2023 ல் எனது தாயார் சொல்லி தான் தெரிய வந்தது என்றால், சரியல்ல. இந்த விஷயத்தை வாதியிடம் எனது தாயார் சொன்னதால், நான் எனது தாயாரை அடித்து குற்றுயிராக்கி போட்டேன் என்றால், சரியல்ல. எனது தாயார் BP இருந்தது. வயது முதிர்வு மற்றும் உடல் நிலை சரியில்லாமல் இறந்தார். எனது தாயார் இறந்த போது அவருடைய உடலில் பல இடங்களில் காயங்கள் இருந்தன என்றால், சரிதான். கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது. நான் எனது தாயாரை அடித்து அவ்வாறு காயங்கள் ஏற்படுத்தினேன் என்றாலும், அவருக்கு BP எதுவும் கிடையாது என்றால், சரியல்ல. எனது தாயார் மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிட்சையில் என் அக்கா புனிதா வைத்து பார்த்தார். எனது தாயார் 12.06.2023 ல் இறந்தார். 10.06.2023 தேதியில் வாதி எனது தாயாரை நான் தாக்கியதாக இரணியல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. காவல் துறையினரை சுவாதின படுத்தி வழக்கு பதியாமல் செய்து விட்டேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு புகைப்படங்களில் உள்ளது நான் தான். அது நான் செல்லும் ஒரு prayer center ல் வைத்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அந்த புகைப்படங்கள் வா.சா.ஆ.10 ன் வரிசையாக குறியீடு செய்யப்படுகின்றன. அந்த Prayer center திருச்சியில் உள்ளது. அந்த புகைப்படங்களில் போதை நோய் சிகிட்சை மையம் என்ற வாசகம் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் ஒரு குடி நோயாளி என்றாலும், நான் அங்கு சிகிட்சை எடுத்த போது அந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டன என்றாலும், சரியல்ல. எனக்கு அஞ்சலக சேமிப்பு கணக்கு உள்ளது. பின்னிட்டு சாட்சி எனக்கு Punjab National Bank ல் சேமிப்பு கணக்கு உள்ளது என்கிறார். வங்கி கணக்கில் எனக்கு Zero Balance தான் உள்ளது. குடும்பத்திற்காக எந்த செலவுகளும் செய்யாத காரணத்தாலும், என் சகோதரிகளின் திருமணத்திற்கு நான் எந்தவொரு பண உதவியும் செய்யாத காரணத்தாலும், வழக்கு பட்டிகை சொத்தினை பொறுத்து அவர்களுக்கும், சமமாக பாகப்பிரிவினை செய்ய வேண்டும் என்று வாக்கால் உடன் படிக்கை செய்தார் என்றாலும், நான்

அதனை மீறி அவரை கட்டாயப்படுத்தி செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வாங்கிக் கொண்டேன் என்றால், சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.2 முதல் பி.வா.சா.ஆ.11 வரையுள்ள ஆவணங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டால் ஏற்புடையவை அல்ல என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.